ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
ජාතික ඇගයීම් හා පරීක්ෂණ සේවාව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
Department of Examinations, Sri Lanka
NATIONAL EVALUATION AND TESTING SERVICE

පැලවත්ත, බත්තරමුල්ල.
பெலவத்தை, பத்தரமுல்ல
Pelawatta, Battaramulla.

දුරකථන / தொலைபேசி / Telephones: 2786200, 2784201, 2785202, 2784203, 2784204, 2786205, 2784206,
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: 011-2785220
තැපැල් ලිපිනය / அஞ்சல் முகவரி / POSTAL ADDRESS: තැ.පෙ. 1503, කොළඹ / த.பெ. 1503 கொழும்பு / P.O.Box 1503 Colombo
අන්තර්ජාල ලිපිනය / இணையதள முகவரி / Internet Address: www.doenets.lk
E-mail : examd@sltnet.lk

මගේ අංකය / எமது இல / My No: ...6/4/SBA/2023........
ඔබේ අංකය / உமது இல / Your No: ..............................
දිනය / திகதி / Date: 2024.07.23

சகல அதிபர்களுக்கும்,

**க.பொ.த. சா.தர) பரீட்சை – 2023(2024)**
**பாடசாலை மட்டக் கணிப்பீடு (SBA) – 10,11 தரங்களின் புள்ளிகளை பெற்றுக்கொள்ளல்**

உங்கள் பாடசாலையில் 2023 வருடத்திற்குரிய க.பொ.த. (சா.தர) பரீட்சைக்கு முதல் தடவையாகத் தோற்றும் மாணவர்களின் பாடசாலை மட்ட கணிப்பீட்டு இறுதிப் புள்ளிகளை நிகழ்நிலையில் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்காக உங்கள் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ள பயநர் பெயர், கடவுச்சொல் ஆகியவற்றைப் பயன்படுத்தி https://onlineexams.gov.lk/eic என்ற மீத்தொடுப்பின் (hyperlink) ஊடாக உரிய நிகழ்நிலை இணைப்பிற்குள் பிரவேசித்து அதில் உள்ள G.C.E. (OL) Examination 2023(2024) SBA Marks என்ற இணைப்பைப் பயன்படுத்தி **2024.08.02** ஆம் திகதிக்கு முன்னர் புள்ளிகளை உள்ளடக்குதல் வேண்டும்.

02. கல்விச் செயலாளரின் 23/2017 சுற்றறிக்கைக்கமைய க.பொ.த. (சா.தர) 2023(2024) பரீட்சைக்கும் அதற்குப் பின்னர் நடாத்தப்படவுள்ள பரீட்சைகளினதும் சான்றுப்படுத்தலுக்காக பாடசாலை மட்டக் கணிப்பீட்டுப் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் போது தரம் 10, தரம் 11 ஆகிய வகுப்புக்களுக்குரிய ஐந்து சந்தர்ப்பங்களுக்குரிய புள்ளிகள் கவனத்திற் கொள்ளப்படும்.

03. கணிப்பீட்டின் இறுதிப் புள்ளிகளை நூற்றுக்கு நிகழ்நிலை முறைமையில் உள்ளடக்கி அனுப்பி வைத்தல் வேண்டும்.

04. மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்நிலை செயலியைப் பயன்படுத்தி சகல பாடங்களுக்கும் உரிய புள்ளிப்பட்டியல்களைப் பதிவேற்றம் செய்ததன் பின்னர் ஒவ்வொரு பாடத்திற்குமுரிய புள்ளிகளின் அச்சுப் பிரதிகளைப் பெற்றுக்கொண்டு அதன் இறுதியில் புள்ளிகளை உள்ளடக்கிய ஆசிரியர், புள்ளிகளைப் பரீட்சித்த ஆசிரியர் ஆகியோர் கையொப்பமிட்டு அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு தேவையான சந்தர்ப்பங்களில் சமர்ப்பிப்பதற்காக பாதுகாப்பாக பாடசாலையில் வைத்துக் கொள்ளல் வேண்டும். இந்த அச்சுப் பிரதிகளை பரீட்சைத் திணைக்களத்துக்கு **அனுப்பத் தேவையில்லை.**

05. இது தொடர்பிலான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களுக்காக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நிகழ்நிலை அலகின் தொலைபேசி இலக்கங்களான 011-3661122, 011-3671568, 011-2784537 ஆகியவற்றின் ஊடாக அல்லது doeonlineexams@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாக விசாரணைகளை மேற்கொள்ளலாம்.

06. பாடசாலை மட்டக் கணிப்பீடுகளை நம்பகமும் தரமும் மிக்கதாக மேற்கொள்வதற்கும் அப்புள்ளிகளைச் சரியாக அனுப்பிவைப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் நீங்கள் வழங்கும் ஒத்துழைப்புகளை பெறுமதியானதாகக் கருதுகின்றேன்.

எம். ஜீவராணிபுனிதா
பரீட்சை ஆணையாளர்
(பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை)

பிரதிகள்: 1. சகல மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் - த.அ.கொ.பொ.
2. சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் - த.அ.கொ.பொ.

D:\New Volume\A\2023\OL\Principal\SBA marks.docx